# Issue 41

## கிறிஸ்டடெல்ஃபியர்கள் யார் ?

கி றி ஸ் ட டெ ல் ஃ பி ய ன் ஸ் (Christadelphians) என்ற பதம் கிரேக்க மூலமொழிகளாகிய Christ மற்றும் adelphos என்ற பதங்களிலிருந்து உருவானது. இதன் அர்த்தம் "கிறிஸ்துவில் சகோதரர்" என்பதாகும். கிறிஸ்டடெல்ஃபியன்ஸ் என்ற உலகளாவிய கிறிஸ்தவ சமுதாயம் 'வேதாகமத்தில் முழுமையாக நம்பிக்கை வைக்கிற' மக்கள் கூட்டமாகும். வேதவாக்கியங்களெல்லாம் தேவனால் அருளப்பட்டவை என்று உறுதியாக நம்புகிறார்கள்.

நாங்கள், தேவனுடைய (ஒரே பேறான) குமாரனாகிய இயேசு கிறிஸ்து வல்லமையோடு பூமிக்குத் திரும்பி வருவார் என்றும், அவர் வருத்தங்கள், அக்கிரமம், ஆக்கிரமிப்புகளை நீக்கி, தமது ஜனங்களுக்கு நியாயத்தையும், சமாதானத்தையும், நீதியையும் கொண்டு வருவார் என்றும் நம்புகிறோம்.

நாம் மரித்தாலும், மரித்தோரிலிருந்து எழும்பி, நியாயந்தீர்க்கப்படுவோம் என்று நம்புகிறோம். அத்துடன், இப்போது வாழும் வாழ்க்கையில் தன்னயமும் பொல்லாங்கும் நிறைந்து வாழ்ந்தவர்கள் நித்தியத்தில் வாழமுடியாமல் அழிக்கப்படுவார்கள். அதற்கு மாறாக, தேவனுடைய வார்த்தையை நம்பி கீழ்ப்படிந்து ஜீவித்தவர்கள் நித்தியமாக ஜீவித்திருப்பார்கள். மேலும் ஒவ்வொருவரின் வாழ்விலும் இரண்டு முக்கியமானவைகளை நிறைவேற்றியே ஆக வேண்டும் என்று விசுவாசிக்கிறோம். அவைகள் (1) தேவனிடம் முழு இருதயத்துடன் அன்பு கூர வேண்டும். (2) உன்னைப் போல பிறரை நேசிக்க வேண்டும்.

ஒருங்கிணைப்பாளர் : லினஸ் டேனியேல்
**e-mail: linus.daniel@hotmail.com**
http://tamil.icdelph.org/
வேதத்தின் சத்தியத்தை கேளுங்கள்
http// www.choose2live.info/new_creation
இந்தியாவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :
The Christadelphians,
P.O. Box 4237, Bangalore 560-042
India
ஸ்ரீலங்காவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :
**The Christadelphians,**
The Christadelphians,
P.O. Box 60, Negombo - 11500,
SRI LANKA.
Email: slcbm2@sltnet.lk

### புது சிருஷ்டி பதிப்பாளர் குழு

லினஸ் டேனியேல் : தலைமை ஒருங்கிணைப்பாளர்
ராஜபட்சம் ஆனந்தா : மொழிபெயர்ப்பு, பதிப்பு மற்றும் கணினி ஒருங்கிணைப்பாளர்
பவித்ரா : நிர்வாகம், உபப்பதிப்பாளர்

திருமதி கிலாடிஸ் சுகிர்தராஜ். சந்திர மோகன் மற்றும் திருமதி சாந்தி பவுல் அவர்களின் தமிழ் மொழிபெயர்ப்பு உதவிகளுக்காக சிறப்பான நன்றி கூறுகிறோம்.

இந்த பத்திரிகையின் வாயிலாக, வேதவாக்கியங்களை வாசிக்க உங்களைத் தூண்டுவதே எங்கள் குறிக்கோள். இதிலுள்ள கட்டுரைகள் உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர உற்சாகப்படுத்தும் என நம்புகிறோம். நம்மை இரட்சிப்புக் கேற்ற ஞானமடையச் செய்வதால் வேதாகமத்தைத் தினமும் வாசிக்க உங்களை உற்சாகப்படுத்துகிறோம்.

இந்த பத்திரிகையில் காணப்படும் எல்லா கட்டுரைகளும் அனைத்துலக கிறிஸ்டடெல்ஃபிய வழிமுறை யிலிருந்து தெரிந்தெடுத்து மொழி பெயர்ப்புச் செய்து பிரசுரமாகியுள்ளன.

*"இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால், புது சிருஷ்டியாயிருக்கிறான். பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின" (2. கொரிந்தியர் 5:17).*



# ஊழியம் கொள்ளும்படி அல்ல - ஊழியம் செய்தற்கே

இந்த வாழ்க்கையினின்றும் யாருமே உயிரோடு வெளியேறியதில்லை. நாட்டுப்புறப்பாடல் பாடும் பாடகியான ஜோன் பேயஸ் "நாம் எப்படி எங்கு சாகப்போகிறோம் என்பதை நாம் நிர்ணயிக்க முடியாது. நாம் வாழப் போகிறோம் என்று வேண்டுமானால், நம்மால் தீர்மானிக்க முடியும்," என்றார்.

இதே கருத்தை வில்லியம் பெந் என்பார் கீழ்க்கண்டவாறு கூறுகிறார், "நான் ஏதாவது ஒரு விதத்தில் கனிவைக் காட்டக் கூடுமெனில் அல்லது யாருக்காவது, ஏதாவது ஒரு நற்செயலை நான் இப்போதே செய்ய வேண்டுமாயின், அதை இப்போதே செய்வேன்..... ஏனெனில் நான் திரும்ப இந்த வழியே வரப்போவதில்லை."

நாம் வாழக்கூடிய காலம் 70 ஆண்டுகள் என வரையறுக்கப்பட்டுள்ளது. சிலருக்கு அது குறைவாகவும், மற்றவர்கட்கு சற்று அதிகமாகவும் இருக்கிறது. நமக்குக் கொடுக்கப்பட்டுள்ள ஒரு நாளில் 24 மணி நேரத்தை ஒவ்வொரு நாளும் ஏதோ ஒரு விதத்தில் செலவு செய்கிறோம். சரியாகவோ, தவறாகவோ, நம் செயல்களை நாமே தெரிந்து கொள்ளலாம். நம் செயல்களுக்காக நாம் எப்படி வருந்தினாலும். நாம் திரும்பச் சென்று அந்தநாளில் மற்றுமொரு முறை வாழமுடியாது. ஆனால் 24 மணி நேரத்திற்கு ஒரு தடவை, காரியங்களைச் சீர்ப்படுத்த ஒரு புதிய நாளும், புதியதொரு வாய்ப்பும் நமக்குக் கொடுக்கப் படுகிறது.

செனெட்டர் எலிசபெத் டோல் இப்படிக் கூறுவதை படியுங்கள்.

"உங்கள் வயது 90 அல்லது 90ஐத் தாண்டிய பின் உங்கள் வாழ்க்கைப் பின்னோக்கிப் பார்க்குங்கால், எவ்வளவு பணம் அல்லது செல்வம் சம்பாதித்தீர்கள் அல்லது புகழ் சேர்க்கும் எத்தனைப் பரிசுகளைப் பெற்றீர்கள் என்பது வாழ்க்கையல்ல. உண்மையில் உங்கள் வாழ் நாள் காலத்தில் எதை ஆதரித்தீர்கள்? மக்களில் ஒரு முற்போக்கான மாற்றத்தை ஏற்படுத்தினீர்களா? என்பது தான் வாழ்க்கை."

நாம் சீக்கிரத்தில் மரித்து விடுவோம் எனத் தெரியும் போது, நாம் சந்தோஷப்படக்கூடிய தெரிவுகளையே தெரிந்து கொண்டுள்ளோம் என்று எண்ணுவது நலம் பயக்கும்.

மிக்கி ரூனி என்பாரிடம், "உங்கள் கல்லறையில் என் வாசகம் பொறிக்கப்பட வேண்டுமென விரும்புகிறீர்கள்?" எனக்கேட்ட பொழுது, அவர், "இதை மட்டும்

எழுதுங்கள்” நான் முயன்றேன். வாழ்க்கை எனும் ஆட்டமே அது தான். முயற்சி செய்வது. முயற்சி செய்பவர்கள், அழுபவர்கள், பொய்யர்கள் ஆகியோர்தான் இவ்வுலகில் வாழ்கிறார்கள் என்றாராம்.

வாழ்க்கையின் இறுதிக் கட்டத்தில் பின்னிட்டுப் பார்க்கும்போது, முக்கியமான தெரிந்து கொள்ளுதலைகளைச் செய்திருப்போமா? நாம் செய்யவேண்டிய காரியங்கள் எவை என நாம் அறிந்தவற்றையே நாம் செய்யும்படி தெரிந்து கொள்கிறோமா? பின்னோக்கிப் பாக்கும்போது, நம்மை மகிழ்விக்கக் கூடிய காரியங்களையே செய்கிறோமா? எது சரியானதோ, அதையே செய்ய நாம் முயல்கிறோமா?

ஆபிரகாம் லிங்கன் இவ்வாறு கூறுகிறார். “கடைசியில், நீங்கள் எத்தனை ஆண்டுகள் வாழ்ந்தீர்கள் என்பது கணக்கில் வராது, அந்த ஆண்டுகளில் உங்கள் வாழ்க்கை எப்படி இருந்தது என்பது தான் எடுத்துக்கொள்ளப்படும்.”

இன்னொரு ஞானி, “நீங்கள் ஒருவருக்கு அதிக அவசரப்பட்டு உதவி செய்துவிட முடியாது, ஏனெனில், நீங்கள் உதவியளிக்க முடியாதபடி ரொம்பவே பிந்திவிட்டதாக எப்பொழுது உணர்வீர்கள் என்று சொல்ல முடியாது” என்றார். நோயுற்ற நம் அன்புக்குரியவர் ஒருவருக்கு ‘நலம் பெறுக’ எனும் வாழ்த்து அட்டையை வாங்குகிறோம். ஆனால் அதை அஞ்சலில் சேர்க்குமுன் அவர் மரித்துவிட்டார் என்ற செய்தி வருகிறது. இங்கே, நாம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடம் என்னவென்றால் - இப்பொழுதே செய். கனிவான நினைவுகள் நல்லவையே - ஆனால் கனிவான செயல்கள் அவற்றைத் தொடர்ந்து செயல்படாவிடில் அந்த நினைவுகளை அவ்வளவு நல்ல நினைவுகள் என்று சொல்ல முடியாது.

தெய்வீகக் கண்ணோடத்தில் நாம் என்ன காண்கிறோம்? “செய்யம்படி உன் கைக்கு நேரிடுகிறது எதுவோ, அதை உன் பெலத்தோடே செய், நீ போகிற பாதாளத்திலே செய்கையும், வித்தையும், அறிவும் ஞானமும் இல்லையே,” என சாலொமோன் உரைக்கிறார்.

எதை உண்பது, எதை உடுத்துவது, வாழ்க்கைப் பிரச்சினைகளை எப்படிச் சமாளிப்பது என்று அன்றாடக் கவலைகளில் மூழ்கிப் போகிறவர்களுக்கு, இயேசுவானவர், “முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள்” என்று ஆலோசனை தருகிறார். நாம் முதலாவது தேவனுக்கு ஊழியம் செய்ய வேண்டும். அதையும் நாம் முழு பெலத்தோடு செய்ய வேண்டும் என தேவன் விரும்புகிறார். பரிசேயர்கள் தவறானவைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்ததால் அவர்களுக்கு ‘ஐயோ’ என்று கூறப்பட்டது. இயேசு அவர்களிடம், “விசேஷித்தவைகளாகிய நீதியையும், இரக்கத்தையும் விசுவாசத்தையும் விட்டு விட்டீர்கள், இவைகளையும் செய்ய வேண்டும்” என்று கூறுகிறார்.





வேதம் கூறும் ராஜரீகப் பிரமாணத்தின் மூலம் நாம் கற்றுக்கொள்கிறபடி, நம் அக்கறை எல்லாம் பிறருடைய தேவைகளைக் குறித்தே இருக்கவேண்டும். ‘‘உன்னைப் போல் உன் பிறனையும் நேசி’’ இயேசுவின் வார்த்தைகள், ‘‘மனுஷர் உங்களுக்கு எவைகளைச் செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்” என்றார்.

“நாம் உண்மையாகவே முயன்று பார்த்தோம்’’ என்று மிக்கி ருனியோடு சேர்ந்து சொல்வோமா? அல்லது எலிசபெத் டோல் போல பிறருடைய வாழ்க்கையில் நல்ல முன்னேற்றத்தை ஏற்படுத்தினோம் என்போமா? அல்லது வில்லியம் பென்னுடன் சேர்ந்து, நம் வாழ்க்கைப் பாதையில் பிறருக்கு நன்மை செய்ய நேரம் கண்டுபிடித்தோம் என்போமா? நம் வாழ்க்கையில் வாழ்ந்தது தான் முக்கியமே தவிர நாம் வாழ்ந்த வருடங்கள் முக்கியமல்ல.

பிறருக்குச் சேவை செய்வதற்கென்றே தேவன் நம் ஒவ்வொருவரையும் இந்தப் பூமியில் வைத்திருக்கிறார். “மனுஷகுமாரனும் ஊழியங் கொள்ளும்படி வராமல், ஊழியஞ் செய்யவும் அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்.” நாளின் முடிவில், வார இறுதியில், ஆண்டின் இறுதியில் வாழ்க்கையின் இறுதிக் கட்டத்தில், “ஊழியங் கொள்ளும்படி வராமல், ஊழியஞ் செய்யவே வந்தோம் என்று நம்மால் சொல்ல முடியுமா?”, “சகோதரரே, நீங்கள் சுயாதீனத்திற்கு அழைக்கப்பட்டீர்கள், இந்தச் சுயாதீனத்தை நீங்கள் மாம்சத்திற்கேதுவாக அநுசரியாமல், அன்பினாலே ஒருவருக்கொருவர்

ஊழியஞ்செய்யுங்கள்”, என்று பவுல் நம்மிடம் கூறுகிறார்.

உண்மையில், அன்பு என்னவென்றால் என்பதை அறிய யோவான் நமக்கு ஒரு சிறிய சோதனை தருகிறார். “இயேசு கிறிஸ்து தம்முடைய ஜீவனை நமக்காகக் கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம். நாமும் சகோதரருக்காக ஜீவனைக் கொடுக்கக் கடனாளிகளாயிருக்கிறோம். ஒருவன் இவ்வுலக ஆஸ்தி உடையவனாயிருந்து, தன் சகோதரனுக்குக் குறைச்சலுண்டென்று கண்டு, தன் இருதயத்தை அவனுக்கு அடைத்துக் கொண்டால், அவனுக்குள் தேவ அன்பு நிலைக்கொள்ளுகிறதெப்படி?” என் பிள்ளைகளே வசனத்தினாலும், நாவினாலுமல்ல, கிரியையினாலும் உண்மையினாலும் அன்புகூரக் கடவோம்.

ஆக, வேதாகமம் சாராத ஆலோசகர்களெல்லாருமே இன்று சரியானதைச் செய்யச் சொல்லுகிறார்கள். ஆவியானவரால் ஏவப்பட்டவர்களோ, நாம் தேவனுடைய பிள்ளைகளில் அன்பு கூருவதன் மூலமாக, நாம் தேவன் மீது கொண்டுள்ள அன்பை வெளிப்படுத்த வேண்டுமென்கிறார்கள். இந்த நிலையற்ற வாழ்விற்கு நாம் திரும்பி வரமாட்டோம் என்பது உண்மை. ஆகவே நம் அன்பை நமது செயல்களின் மூலம் காட்டுவதற்கான காலம் இதுவே. இன்னும் எவ்வளவு காலம் நமக்கிருக்கிறது என்பது நம்மில் யாருக்குமே தெரியாது. பவுலடியாரின் ஞானம் நிறைந்த புத்திமதிக்குச் செவிகொடுப்போம். ‘‘நீங்கள் ஞானமற்றவர்களைப் போல நடவாமல், ஞானமுள்ளவர்களைப் போலக் கவனமாய் நடந்து கொள்ளப் பார்த்து, நாட்கள் பொல்லாதவைகளானதால், காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள். ஆகையால் நீங்கள் மதியற்றவர்களாயிராமல், கர்த்தருடைய சித்தம் இன்னதென்று உணர்ந்து கொள்ளுங்கள். ஆவியினால் நிறைந்து, சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும், ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லிக் கொண்டு உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம் பண்ணி, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே, எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரியுங்கள்.”

**- ராபர்ட் ஜே லாயிட்**



# சிந்திப்பதற்கு தேவன் எங்கே இருக்கிறார் ?



தேவன் எங்கே இருக்கிறார்? ஞாயிற்றுக்கிழமை காலை ஆலயத்தை விட்டு வெளியேறியதும் நாம் தேவனுடைய பிரசன்னத்தை விட்டு விலகிப் போய் விடுகிறோமா? நாம் ஆராதிக்கப் போகும் ஒரே ஒரு இடத்தில் தான் அவர் நம்மைப் பார்க்கிறாரா? நம் படுக்கை அறையில், கதவு சாத்தப்பட்டு அவர் கண்களுக்கு மறைவாயிருக்கிறோமா? நம் விடுமுறைக்காகப் போகும் சமயம் தேவனிடத்திலிருந்துமா விடுமுறை - ஜெபம் மற்றும் வேதவாசிப்பு எனும் பாரசுமைகளிலிருந்து விடுதலையா?

தேவன் இஸ்ரவேலிடம் இதே கேள்விகளைத் தான் கேட்டார். “நான் சமீபத்திற்கு மாத்திரமா தேவன், தூரத்திற்கும் தேவன் அல்லவோ என்று கர்த்தர் சொல்லுகிறார். நான் வானத்தையும் பூமியையும் நிரப்புகிறவர் அல்லவோ? என்று கர்த்தர் சொல்லுகிறார்.” (எரேமியா 23:23-24)

இக்கேள்விகளுக்குப் பதில் யாதெனில் தேவன் எங்குமிருக்கிறார். தேவன் இல்லாத இடத்திற்கு நாம் போகமுடியாது. அவர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறார்; எல்லாவற்றையும் காண்கிறார் - இரகசியமாயிருக்கட்டும் என நாம் விரும்பும் காரியங்களையும் அறிகிறார். இக் கேள்விகளெல்லாம் மிக எளிமையான கேள்விகளாகவும் பதில்களாகவும் தோன்றலாம். ஆனால் பதில்களை அறிந்திருப்பதற்கும், நமக்குத் தெரிந்த மாதிரி நடிப்பதற்கும் ஒரு பெரிய வேறுபாடு இருக்கிறது. பதில் நமது செயல்களின் மூலம் வெளிப்படவேண்டும். தேவன் ஆலயத்தில் மட்டும் தான் இருப்பதாக யூதா எண்ணி இருக்கிறார். எப்போதும் நம்மைப் பார்க்கிறார். நாம் எங்கிருந்தாலும், என்னவேலை செய்தாலும் தேவன் நம்மோடிருக்கிறார். நாமும் எல்லா நேரங்களிலும் அவர் நம் அருகில் இருப்பதாக எண்ணிக் கொண்டு வாழவேண்டும்.

# தனிமை

தனிமை என்பது சாதாரணமான, பொதுவாய் காணப்படக் கூடிய பிரச்சினை என்றாலும், அது வெட்கத்திற்குரிய விஷயமாய்க் கருதப்படுவதால், தனிமை குறித்துப் பேசுவது கடினமாயிருக்கலாம். இப்பொருள் குறித்த கருத்தரங்கிற்கு ஒரு முறை போயிருந்தேன். ஆயினும் எந்தக் கருத்தரங்கிற்கு வந்திருக்கிறேன் என யாருடனும் சொல்ல நான் விரும்பவில்லை. அவர்கள் என்ன நினைப்பார்கள் என்று பயந்து தான் மற்ற மக்களும் அதில் கலந்து கொள்ள வருவதைக் கண்ட நான், “தைரியசாலிகளான, தாலந்து பெற்ற, மக்களோடு தாராளமாய்ப் பழகக் கூடிய இந்த மக்களெல்லாம் இங்கு ஏன் வருகிறார்கள்? அவர்கள் இங்கே கேட்கப்படும் கேள்விகட்குப் பெருமையோடு பதிலளிக்க வருகிறார்களா? அல்லது உதவி பெற வருகிறார்களா?” என்று நினைத்தேன். நான் ஒரு முக்கியமான பாடத்தைக் கற்றுக் கொண்டேன். ‘தன்மை, அமைதலாய் ஒரு முக்கியமான பாடத்தைக் கற்றுக் கொண்டேன்.’ ‘தனிமை, அமைதலாய் ஒரு முலையில் உட்கார்ந்திருப்பவருக்கு மட்டுமே உரியதல்ல. எல்லாருடனும் எளிதில் பழகக் கூடியவரும் தனிமையை உணரக்கூடும்.





தனிமை என்பது தனியாயிருப்பது என்றாகாது. இரண்டும் வேறுபட்டவை. மக்கள் சூழ இருந்தும், சந்தோஷமிகாலாமல் இருப்பதைக் காட்டிலும் தனியே மனதுக்குப் பிடித்த செயலை அநுபவித்துச் செய்வது எவ்வளவோ மேலானது. பெரும்பான்மைப் புத்தகங்கள் தனிமையை இருவிதமாகப் பிரிக்கின்றன. காலம், சந்தர்ப்ப சூழ்நிலையில் அல்லது நீண்ட காலம், நாள்பட்ட ஒருபுதிய பணியில் தனிமையை உணர்வது சகஜம் தான் புதிய சபை, புதிய நாடு, புதிய பள்ளி, அல்லது யாருமே அறிமுகமில்லாத ஒரு கூட்டம் அல்லது சபை யாருமே அறிமுகமில்லாத ஒரு கிறிஸ்டடெல்பியன் சபையில் இத்தனிமை சில நிமிடங்களே நீடிக்கும் என நம்புகிறோம். மக்கள் ஒருவரோடொருவர் பேசிக் கொள்ளும் போது, அவர்கள் காலங்காலமாய் ஒருவரையொருவர் தெரிந்திருப்பவர்கள் போல் பேசும் போது தனிமை உணர்வு போய்விடுகிறது. பெரிய கூட்டங்களை விட, குறைந்த எண்ணிக்கையில் மக்கள் உள்ள கூட்டத்தில், செய்யும் பணியில் தனிமை உணர்வு சீக்கிரத்தில் போய்விடுகிறது.

நான்பட்ட தனிமை உணர்வில் வாடுபவர்கள், “நான் சொந்தங்கொண்டாட எப்போதுமே யாரும் இருந்ததில்லை. நண்பர்களுமில்லை. இனிமேலும் இருக்கமாட்டார்கள். என்னில் ஏதோ தவறு இருக்கிறது. யாருமே என்னை விரும்புவதில்லை. இது ரொம்பமோசம். எனக்கு வாழக் கூடப் பிடிக்கவில்லை,” என்று நினைக்கிறார்கள். இச்சிந்தனைப் போக்கு மனத்தாழ்ச்சிபோல் காணப்படுகிறது. தனிமையும் மனத்தாழ்ச்சியும் ஒன்றுடன் ஒன்று நெருக்கமானவை என எண்ணுகிறேன். காரணமும் விளைவும் இரு வழிகளிலும் வேலை செய்யலாம். அதாவது நாள்பட்ட தனிமை மனத்தாழ்ச்சியை உண்டாக்கலாம். அதே சமயம் தனிமை, மனத்தாழ்ச்சியின் அறிகுறி எனவும் கூறப்படுகிறது. மனத் தாழ்ச்சியின் ஒரு பகுதி என்ன வென்றால், நட்பு, அன்பு, பராமரித்தல் போன்ற வாழ்க்கையின் நல்ல காரியங்களைக் கூடக் காம முடியாமலும் கிடைத்தாலும் கூட அனுபவிக்க முடியாத ஒரு பரிதாப நிலை மக்களோடு தொடர்பில் இல்லாத ஒரு உணர்வு. உண்மையில், மனத்தாழ்ச்சியில் உழலும் மக்கள் உதவி கிடைக்காதா என்று மனதுக்குள் ஏங்கினாலும், தாங்களாகவே மற்றவர்களிடமிருந்து தங்களைத் தனிமைப் படுத்திக்கொள்வர். ஆகவே, “ஓ, அவளைத் தனியே விட்டுவிடவேண்டும் எனவிரும்புகிறாள்,” என மற்றவர்கள் நினைக்கத் தோன்றும். மனதை வாசிப்பவராக இருப்பது கடினம் தான். ஆயினும் ஒருவருக்கு உதவும் போது, முதல் தடவை “போய்விடு, என்னை விட்டுவிடு,” என்று சொல்பவரிடம் தொடர்ந்து முயல்வது நன்மைபயக்கும்.

ஒரு சிறிய சமுதாயம் அல்லது குழுவைச் சேர்ந்தவர்களெளில், சிறு வயதிலிருந்தே தனிமையை அநுபவிக்கிறார்கள். படிப்பைத்தவிர பள்ளியில் நடக்கும் எந்த செயல்களிலும் தங்கள் பிள்ளைகள் ஈடுபடுவதை சில பெற்றோர்

அநுமதிப்பதில்லை. அதனால் கலந்து பழக, விளையாட பிள்ளைகளுக்கு வாய்ப்பு கிடைக்காமற் போவதால் தனியாயிருப்பதாகப் பிள்ளைகள் உணர்கிறார்கள். ஓய்வுநாள் பள்ளியில் கூட ஒத்தவயதினர் இல்லாவிடில் தனிமை உணர்வுதான் மிஞ்சுகிறது. இந்தப் பிள்ளைகள் வளர்ந்தபிறகு, முகாம்கள், இளைஞர்க்கான வார இறுதிக் கூட்டங்களில் கூட, அவர்களோடு செல்ல ஒரு கூட்டம் நண்பர்கள் இல்லாவிடில் கஷ்டப்படுவார்கள்.

ஒரே சபையிலுள்ள வெவ்வேறு நபர்கள் கூட வெவ்வேறு காரணங்களுக்காகத் தாங்கள் அங்கே பொருந்தாதவர்களாய் உணரக்கூடும். திருமணமாகாதவர் சபையில் அநேகக் கூடுகைகள், செயல்கள் குடும்பம் சார்ந்தவையாயிருக்கிறதாக உணரக்கூடும். சிறு குழந்தைகளுள்ள தாய், தான் அநேக வேதாகம வகுப்புகளின் கலந்துரையாடல்களில், வேறு பல சம்பவங்களில் குழந்தைகள் பராமரிப்பு வசதியில்லாததால் தான் பங்கு பெறமுடியவில்லை என்பாள். நமக்கிருப்பதை விட வித்தியாசமான சூழ்நிலைகளிலுள்ள மக்களுடன் நேர்மையான நட்பு விலையேறப் பெற்றது மற்றவர்களுக்கும் கூடப் பிரச்சனைகள் உள்ளன என்பதை நாம் விளங்கிக் கொள்ள, இந்நட்பு உதவுகிறது. புதிதாக சத்தியத்திற்குள் வந்தவர் சபையில், மற்றவர்கள் தங்கள் குடும்பம் உறவினருடன் அளவளாவும் போது, தான் அங்கே பொருந்தாதவர் போல் உணர்வார்.

தனிமைக்கு விடையாக அமைபவர் இயேசுவா ?

இந்தக் கேள்வி குறித்து அதிகமாக நினைத்துப் பார்த்திருக்கிறேன். ஆனாலும், இப்போதும் கூட 'ஆம் என்றும் இல்லை என்றும் சொல்லத் தொன்றுகிறது. முதலாவது இல்லை என்பதைப் பார்ப்போம். என்னதான் விசுவாசம் இருந்தாலும், நட்பு தேவைப்படுவதை நீக்கிவிட முடியாது. அல்லது ஒதுக்கித் தள்ளப்படுவதால் ஏற்படும் மனக் காலம், இம்சைப்படுத்தப் படுதல், அன்பு குரியவர்களை அழந்ததுக்கம் அல்லது வீட்டு நினைவு ஆகியவற்றை விசுவாசம் நிறுத்திப் போடமுடியாது. விசுவாசத்தைக் கண்டுபிடித்து, கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு, திருமுழுக்கும் பெற்றுவிடுவது சமுதாயத்தில் நாம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை அற்புதமானவிதமாக மறைந்துபோகச் செய்வதில்லை. சந்தோஷமாயிலாலத தினிமையிலுள்ள வளர் இளம் பருவத்தினர் அல்லது ஒரு மனிதர் திருமுழுக்கு பெற்று, திடீரென மாற்றமடைந்து, எல்லாரும் விரும்பத்தக்கவராவார் என்று எதிர்பார்த்தால் ஏமாற்றமே மிஞ்சும்.'

இயேசு மெய்யாகவே உதவி செய்கிறார் - அதிகமாக ! எப்படி ? தொடர்ந்து செல்ல, துன்பநேரங்களையும் கடந்து செல்ல உதவுகிறார். அவரோடு பேசுவது ஒரு பெரிய ஆறுதல் வாழக்கைக்கு ஒரு அர்த்முண்டு என்பதை அறிந்து கொள்ளுதலும், ராஜ்யத்தைக் குறித்த நம்பிக்கையும் முயற்சியைக் கைவிடாமல்



செல்ல, முன்னேற உதவுகிறது. மிகப்பெரிய காரியம் அன்பு - நான் இருக்கிறபடியே இருந்தாலும் அன்பு அங்கே உண்டு. ஆம், நாம் எல்லாரும் மாறவேண்டும். கிறிஸ்தவ வாழ்க்கையின் முக்கிய பகுதி இது. என்றாலும் நாம் மாறுமுன்னரே அல்லது மாறிக்கொண்டிருக்கையிலேயே நாம் நேசிக்ககப்படுகிறோம். ரோமர் 5 கூறுகிறபடி "நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே" தேவன் நம்மேல் வைத்த அன்பை விளங்கப் பண்ணுகிறார்." - நாம் சிறந்தவர்களாயிருந்த போதல்ல, நாம்மோசமாக மட்டரகமாக இருந்தபோது, அது பொதுவாக நம்மிடம் கூறுவதற்கு முற்றிலும் வித்தியாசமானது மக்கள் கூறுவது நீ மாறினால், மாறும்போது நீ ஏற்றுக்கொள்ளப்படுவாய்."

**தனிமைக் காலங்களைக் கடந்து செல்வது:**

ஜெபம் செய் - தேவனுடனும் இயேசுவுடனும் பேசிக் கொண்டேயிரு. உனக்கு ஆறுதல் தரும் வேத பகுதிகளையும் வேறு முற்போக்குக் கருத்துகளைக்கூறும் புத்தகங்களை வாசி. உன்னைப் பராமரிப்பவர்களிடமும் நட்புடன் பழகுபவர்களையும் பாராட்டு. அவர்கள் உன் வயதினராயில்லை யென்றாலும், உன்னோடு சேர்ந்துவர்களாயில்லாவிடினும் கவலைப்படாதே. சிலவேலைகளில் தனிமை நம்மை வாட்டும்போது, நன்றாக, ஜீவனோடு கலகலப்பாகப் பேசிப் பழகும் மக்களோடு இருக்கவேண்டியதன் அவசியத்தை உணர்கிறோம். ஆனால் அது அவ்வளவு வெற்றிகரமாக அமைவதில்லை. தனியாருக்கும் தனிமைவிரும்பிகளோடு நட்புடன் பழகி இருத்தல் நல்லது. எளிதில் பழகக் கூடிய மக்களோடு முதியவர்கள் அல்லது சிறுவர்களுடன் நேரம் செலவிடு செய்வதற்கு ஏதாவதொன்றைக் கண்டுபிடி, சுத்தம் செய்தல், பராமரிப்பு இல்லங்களுக்குச் செல்லுதல், ஒரு பெரிய கூட்டத்தில் சேர்ந்துகொள். இப்படிச் செயல்களில் ஈடுபடுவது மனப்போங்கில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்துகிறது. அதைச் செய்யும்போது நட்புடன் பழகக்கூடிய மக்களைச் சந்திப்பாய். மக்களை நேருக்குநேர் சந்திப்பது கடினமெனில் மின்னஞ்சல் மூலம் அல்லது தபால் மூலம் தொடர்புகொள். அதிகமாக வெட்கப்படுபவர்கள், தனியாருப்பவர்கள் ஆகியோருக்கு இன்டர்நெட் ஒரு பெரிய ஆசீர்வாதம் - நண்பர்களைப் பெறவும் உலகெங்குமுள்ள சபைமக்களோடு தொடர்பு கொள்ளவும் முடிகிறது. ஒரு போதும் மனம்தளராதே, முயற்சியை விட்டுவிடாதே எல்லாமே மாறக்கூடும், மாறுகின்றன - நாம் விரும்புகிற வேகத்திற்கு ஒரு வேளை மாறாமல் இருக்கலாம். உன்னிடமிருந்தும் பிறரிடமிருந்தும் மிதமிஞ்சி எதிர்பார்க்காதே - சின்னச் சின்னத் தப்படிகல் (நுஞ்க்சிசூ) எடுத்துவை - ஒரு நாளைக்கு ஒன்று.

**பிறருக்கு உதவுதல்**

விழிப்புடன் இரு. தனியாக ஓரத்தில் நிற்கும் மக்களில் கவனம்வை. ஒரு குழுவாகப் பேசிக்கொண்டிருந்தால், நெருக்கமாக நிற்காமல் மற்றவர்களும் வந்து சேர்ந்து கொள்ள இடம் விட்டு நின்றுகொள். நெருக்கமாக நாலுக்பேர் நின்று அல்லது ஒரு மேசையைச் சுற்றி அமர்ந்து பேசிக் கொண்டிருப்பவர்களிடம் போகாதே. துரிதகதியில் ஒருவரிடம் போய் அவரின் தனிமையைப் போகவிட முயலாதிருப்பது நல்லது. நாம் பிறரிடம் பழகுவதை விரும்புமள்விற்கு அடுத்தவர் விரும்பாமலிருக்கலாம். நீ புத்திமதி அல்லது ஆலோசனை கொடுக்குமுன் அன்பும் ஆதரவும் கொடு - அம்முறையைக் கையாண்டால் தான் புத்திமதி ஏற்றுக் கொள்ளப்படும்! ஆலோசனை கொடுக்கத் தோன்றும் போது, இவருக்குக் கொடுக்கும் ஆலோசனைப் படி என்னால் செய்ய முடியுமா, அல்லது நான் செய்திருக்கிறேனா என நினைத்துப்பார். ஒருகூட்டத்தில் நான் கலந்துகொள்ளத் தனியாகச் செல்லப் பயப்படும்போது இன்னொருவர் கூட்டத்திற்குத் தநியாகச் செல்லும்படி சொல்வது சரியல்ல. வீட்டை அல்லது அறையை விட்டு வெளியே செல்லும்படிக் கூறுவதைவிட நீஈடுபடும் செயல்களில் அவரும் ஈடுபட அழைத்திரு. உன் வண்டியில் ஏற்றிச் செல். மற்றவர்கள் தாங்கள் தனிமையில் வாடுவதைப் பிறர் அறிவதை விரும்ப மாட்டார்கள். பிறர் தங்களுக்காகப் பரிதாபப்படுவதையும் விரும்புவதில்லை என்பதை உணர்ந்து நடந்துகொள். உன் வயதினராயில்லாத ஒருவருக்கு உன்னால் உதவ முடியாது என்று நீயே நினைத்துக் கொள்ளாதே. யாரும் ஆர்வத்துடன் அக்கரை கொண்டு உதவலாம். ஒருவார இறுதிக்கூட்டத்திற்கு உன்னால் போக முடியாவிடில் போவதற்கு விருப்பமுள்ள இளம்நபர் ஒருவர் போக உதவிடு. விசுவாசமுள்ளவனாயிரு. இயேசு உன் சகோதரன் அல்லது சகோதரிக்கு உதவி செய்ய முடியும். அவர்களுக்காக ஜெபம்செய்; அப்படி ஜெபம் செய்கிறாய் எனவும் கூறு. கனிவாயிருக்க வேண்டுமென்றால் அடுத்தவரின் எல்லாக் கேள்விகளையும் நீ புரிந்து கொள்ள முடியாதென்பதை நினைவில் கொள். திருமணமாகாத ஒருவர் இருந்தால் அவருக்கு வாழ்க்கைத் துணையை நீதேடித்தர அவர்கள் எதிர்பார்ப்பதாக நினைத்துக் கொள்ளாதே. திருமணமாகாவிடில் தனிமையிலே வாடிவிடுவார்கள் என்று எண்ணாதே. திருமணமானவர்கள் தனிமையால் கஷ்டப்படுவதில்லை என அநுமானித்துக் கொள்ளாதே. மொத்தத்தில் அநுமானங்களைத் தவிர்த்திரு சின்னச் சின்ன காரியங்களைக் குறைவாக மதிப்பிட கனிவான ஒரு வார்த்தை ஒரு தபால் அட்டை அதிகமதிப்பு பெற்றதாகுமே! எல்லாரையும் உற்சாகப்படுத்து - உன் உற்சாகமுட்டுதல் அவர்களுக்குத் தேவைப்படாது என்று நினைக்காதே.



# பூமி எரிந்து அழிந்து போகுமா ?



கேள்வி: 2 பேதுரு 3ல் சொல்லப்பட்டபடி 'வானங்களும்' பூமியும் அக்கினிக்கு இரையாக வைக்கப்பட்டு எரிந்து போகுமா?

பதில்: கேள்விக்கான பதில் தரும் வேத பகுதி 2 பேதுரு 3:7,10-12.

"இப்பொழுது இருக்கிற வானங்களும் பூமியும் அந்த வார்த்தையினாலேயே அக்கினிக்கு இரையாக வைக்கப்பட்டு, தேவபக்தியில்லாதவர்கள் நியாயந்தீர்க்கப்பட்டு அழிந்து போகும் நான் வரைக்கும் காக்கப்பட்டிருக்கிறது..... கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிற விதமாய் வரும்; அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்று போம்; பூதங்கள் வெந்துருகிப் போம், பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம்" இப்படி இவைகளெல்லாம் அழிந்து போகிறதாயிருக்கிறபடியால் நீங்கள் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும் தேவபக்தியும் உள்ளவர்களாயிருக்க வேண்டும்! தேவனுடைய நாள் சீக்கிரமாய் வரும்படிக்கு மிகுந்த ஆவலோடே காத்திருங்கள். அந்த நாளில் வானங்கள்

வெந்து அழிந்து பூதங்கள் எரிந்து உருகிப்போம்.”

இப்பகுதியில் “வானங்கள்” என்பது வெகு காலமாக அரசியலைப் பற்றியது எனக் கருதப்படுகிறது. வானங்கள் எப்படி “அகன்றுபோக” முடியும்? உண்மையில் பூதங்கள் எப்படி வெந்துருகிப்போம்? பூமி எப்படி எரிந்து அழிந்து போம்? இரண்டாவது உலகப் போரின் முடிவில், அந்தப் பயங்கரமான நாட்களுக்கப்புறம் இந்த இருபத்தோராம் நூற்றாண்டு மனிதன், இப்பொழுது இவ்வுலகத்தின் அஸ்திபாரத்தையே பிளக்கும் சக்தியைக் கொண்டுள்ளான் என்பது உண்மையும் நிஜமுமாகும். நிலையில்லாத அணுவின் பகுதிப் பொருள்கள், கற்பனைக் கெட்டாத ஆற்றலை, பூமியையே சாம்பலாக்கக் கூடிய ஆற்றலைப் பெற்றுள்ளன.

ஆகவே, 2 பேதுரு 3 ஓராளவுக்கு வார்த்தையின் படியே நிறைவேறலாம்.

எத்தகைய அழிவை ஆண்டவர் “பூமியின்” மேல் அனுமதித்தாலும், அது மீண்டும் வேகமாக சிருஷ்டிக்கப்படும் அல்லது புதுப்பிக்கப் படும். பேதுருவால் மேற்கோள் காட்டப்படும் ஏசாயா 65:17-19 இதைப் பற்றிக் கூறுகிறது.

“இதோ நான் புதிய வானத்தையும் புதிய பூமியையும் சிருஷ்டிக்கிறேன்; முந்தினவைகள் இனி நினைக்கப் படுவது மில்லை, மனதிலே தோன்றுவதுமில்லை. நான் சிருஷ்டிக்கிறதினாலே. நீங்கள் என்றென்றைக்கும் மகிழ்ந்து களிகூர்ந்திருங்கள்; இதோ எருசலேமைக் களிகூருதலாகவும் அதின் ஜனததை மகிழ்ச்சியாகவும் சிருஷ்டிக்கிறேன். நான் எருசலேமின் மேல் களிகூர்ந்து, என் ஜனத்தின்மேல் மகிழ்ச்சியாயிருப்பேன்; அழுகையின் சத்தமும் கூக்குரலின் சத்தமும் அதில் இனிக் கேட்கப்படுவதில்லை.” ஏசாயா 65:17-19.

ஆகவே உண்மையாகவே இந்த பூமி எரிந்து போனாலும், அதன் இடத்தை இன்னொரு ‘பூமி’ எடுத்துக் கொள்ளும். அதில் இஸ்ரேலும், எருசலேமும் (மற்ற முக்கியமான இடங்களும்) இடம் பெறும்!

கேள்யிலுள்ள பகுதியில் (2பேதுரு 3) பேதுரு “வானங்கள்” “பூமி” மற்றும் உலகம் ஒரு விசை தண்ணீரால் “அழிக்கப்பட்டன” (வ.5,6) - நோவாவின் காலத்து வெள்ளம் பற்றிக் குறிப்பிடுகிறார். வரலாறிலிருந்து, இந்த எடுத்துக்காட்டைப் பயன்படுத்தி, பேதுரு வரப்போகும். ‘‘அழிவு’’ பற்றி எச்சரிக்கிறார். நோவாவின் காலத்து வெள்ளம் பொல்லாதவர்களை அவர்களின் பொல்லாத கிரியைகடுங்கூட அழித்து, ஆனால் ஒரு புதிய ஆரம்பத்திற்காக சுத்தமாக்கப்பட்ட பூமி உருண்டையை மீதிவைத்தார். ஆகவே, அதே போல, தெய்வீக நியாயத்தீர்ப்பின் வரப்போகம். அக்கினி பொல்லாத மனிதர்களையும் அவர்களின் பொல்லாத நிறுவனங்களையும் (வ.7) எரித்து அழியப் பண்ணுவார். ஆனால் சுத்தமாக்கப்பட்ட ஒரு உலகம் கிறிஸ்து கொண்டுவரப்போகும் தேவனுடைய ராஜ்யத்தைப் பெற்றுக் கொள்ளவிட்டு வைக்கப்படும்.



# தேவ ஆவியினால் அருளப்பட்ட வேதாகமம்



கிறிஸ்டடெல்பியன் விசுவாசத்தின் அடித்தள ஆதாரமாகவுள்ள கொள்கை, முற்றிலும் தேவ ஆவியினால் அருளப்பட்ட வேதாகமத்தின் பேரிலுள்ள நம்பிக்கை அல்லது விசுவாசம். சொற்களாகிய வேதவாக்கியம் மிக முக்கியமான கோட்பாட்டை நமக்கு அளிக்கிறது. வேதாகமம் தெய்வீக வழிநடத்தலால் (ஆதலால் தவறு ஏதும் இல்லாதது) எழுதப்படாவிட்டால், அப்போது தேவனைப் பற்றிய அறிவு மற்றும் மனிதரோடு அவர் செய்யும் கிரியை ஆகியவற்றைத் தரும் ஆதாரம் நம்புவதற்கேற்றதல்ல. வேதாகமம் தேவனிடமிருந்து வந்தது, தேவனே அதை எழுதுவதற்கான காரணர் என்ற திட நம்பிக்கையோடு, வேதாகமத்தை தேவனுடைய அதிகாரபூர்வமான வார்த்தை என்று எடுத்துக்கொள்ளாவிடில் ஆவிக்குரிய காரியங்களிலும், இரட்சிப்புக்கு அடுத்த விஷயங்களிலும் அறிவு பெறுவதில் நாம் எந்த முன்னேற்றமும் காணமுடியாது. இதனால் தான் பர்மிங்ஹாம் திருத்திய விசுவாச அறிக்கை கீழ்கண்டவாறு கூறுகிறது. மோசே, தீர்க்கதரிசிகள், அப்போஸ்தலர்கள்

ஆகியோரின் வேதவாக்கியங்கள் அடங்கிய வேதாகமம் என்றழைக்கப்படுகிற புத்தகம் ஒன்று மட்டுமே தான் தேவனைக் குறித்த அறிவுக்கும், இப்போதும் இனியும் உள்ள அவருடைய நோக்கங்கள் குறித்த அறிவுக்கும் மூல ஆதாரமாகி இருக்கிறது. மேலும் அந்த வேதவாக்கியங்கள் எழுதியவர் வேதாகமத்தின் அனைத்துப் பகுதிகளிலும் தவறு ஏதும் இல்லை. மொழிபெயர்க்கும் போது தவறு ஏற்பட்டிருந்தால் உண்டு. (2 தீமோ 3:16; 1கொரி 2:13; எபி 1:1; 2பேதுரு 1:21; 1கொரி 14:37; நெகேமியா 9:30; யோவான் 10:35)

ஆவியானவரால் உந்தப்பட்டு எழுதப்பட்ட வேதவாக்கியங்களின் முக்கிய அம்சங்கள்

1. தேவன் தம் ஆவியின் மூலமாய் வெளியே சுவாசத்தை விட்டதனால் (வெளிமூச்சினால்) வேதாகமம் உண்டாக்கப்பட்டது. 2 தீமோத்தேயு 3:1 "வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது."

2. தேவனுடைய ஆவியானவர் மனிதர் எழும்படி வழிநடத்தினார், ஏவினார். 2 பேதுரு 1:2-21, வேதத்திலுள்ள எந்தத் தீர்க்கதரிசனமும் சுயதோற்றமான பொருளையுடையதாயிராதென்று நீங்கள் முந்தி அறிய வேண்டியது. தீர்க்கதரிசினமாது ஒரு காலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை. தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள்.

3. இப்படி பரிசுத்த ஆவியானாலே ஏவப்பட்டு வேதாகமத்தை எழுதினவர்கள் தேவனுடைய தெய்வீக அதிகாரத்தினாலேயே எழுதினார்கள். அவர்களுடைய வார்த்தைகள் தேவனுடைய மக்களைக் கட்டுப்படுத்துகின்றன. 1 கொரி 2:12,13 "நாங்களோ... தேவனால் எங்களுக்கு அருளப்பட்டவைகளை அறியும்படிக்குத் தேவனிடத்திலிருந்து புறப்படுகிற ஆவியையே பெற்றோம். அவைகளை நாங்கள் மனுஷஞானம் போதிக்கிற வார்த்தைகளாலே பேசாமல், பரிசுத்த ஆவி போதிக்கிற வார்த்தைகளாலே பேசி, ஆவிக்குரியவைகளை ஆவிக்குரியவைகளோடே சம்பந்தப்படுத்திக் காண்பிக்கிறோம்." 1 கொரி 14:37.... "நான் உங்களுக்கு எழுதுகிறவைகள் கர்த்தருடைய கற்பனைகள்" யோவான் 10:35. இயேசுவானவர் "வேதவாக்கியம் தவறாததாயிருக்கிறது" என்றார்.

4. வேதவாகமம் ஏவப்பட்டு எழுதப்படுவதில் பயன்படுத்தப்படும் வார்த்தைகள் மீது தெய்வீகக் கட்டுப்பாடு அல்லது தெய்வீக மேலாண்மை செயல்படுகிறது. எண்ணாகமம் 22:38; 23:3,5... "தேவன் என் வாயிலே அளிக்கும் வார்த்தையையே சொல்லுவேன்'' பின்பு பிலேயாம் பாலாகை நோக்கி.... ''அவர் எனக்குவெளிப்படுத்துவதை உமக்கு அறிவிப்பேன்".... "கர்த்தர் பிலேயாமின் வாயிலே வாக்கு அருளினார்" 2 சாமுவேல் 23:1-3 "தாவீதுடைய கடைசி



வார்த்தைகள்; யாக்கோபுடைய தேவனால் அபிஷேகம் பெற்று, ஈசாயின் குமாரனாகிய தாவீது என்னும் புருஷன் சொல்லுகிறது என்னவென்றால்; கர்த்தருடைய ஆவியானவர் என்னைக் கொண்டு பேசினார்; அவருடைய வசனம் என்னுடைய நாவில் இருந்தது. இஸ்வேலின் தேவனும் இஸ்ரவேலின் கன்மலையுமானவர் எனக்குச் சொல்லி உரைத்ததாவது; எரேமியா 1:7,9. "ஆனாலும் கர்த்தர்.... நான் உனக்குக் கட்டளையிடுகிறவைகளை எல்லாம் நீ பேசுவாயாகா.... இதோ என் வார்த்தைகளை உன் வாயிலே வைக்கிறேன்." யோவான் 14:10,24... "நான் (இயேசு) உங்களுடைனே சொல்லுகிற வசனங்களை என் சுயமாய்ச் சொல்லவில்லை..... நீங்கள் கேட்கிற வசனம் என்னுடையதாயிராமல் என்னை அனுப்பின பிதாவினுடையதாயிருக்கிறது"

வேதங்கள் யாவும் தெய்வீக ஏவுதலினால் எழுதப்பட்டிருப்பதால் வேதத்தில் தவறு நிகழும் வாய்ப்பே இல்லை. சங்கீதம் 12:6 "கர்த்தருடைய சொற்கள் மண் குகையில் எழுதரம் உருக்கி, புடமிடப்பட்ட வெள்ளிக்கொப்பான சுத்த சொற்களாயிருக்கிறது."

6. நமக்கு அறிவு புகட்டவும், நம்மை மாற்றவும் ரட்சிக்கவும் தேவனுடைய ஆவியானவரின் வல்லமை வேத வாக்கியங்களில் உள்ளன. அதை இன்னும் தெளிவாக்க, மேலும் தேவ ஆவியானவரின் செயல் தேவையில்லை. 2 தீமோத்தேயு 3:15.... பரிசுத்த வேத எழுத்துக்கள். உன்னை இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ளவனாக்கத் தக்க (கிரேக்கம் 'முனாமை' சக்தி பெற்ற) யோவான் 6:63.... "நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது. அப்போஸ்தலர் 20:32..... இப்பொழுதும் சகோதரரே, நீங்கள் பக்திவிருத்தியடையவும் பரிசுத்தமாக்கப்பட்ட அனைவருக்குள்ளும் உங்களுக்குச் சுதந்திரத்தைக் கொடுக்கவும் வல்லவராயிருக்கிற தேவனுக்கும் அவருடைய கிருபையுள்ள வசனத்துக்கும் உங்களை ஒப்புக் கொடுக்கிறேன். ரோமர் 10:17 "விசுவாசம் கேள்வியினாலே வரும் கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்." ஏசாயா 55:11 என் வாயிலிருந்து புறப்படும் வசனமும் இருக்கும். அது வெறுமையாய் என்னிடத்திற்குத் திரும்பினால், அது நான் விரும்புகிறதைச் செய்து, நான் அதை அனுப்பின காரியமாகும்படி வாய்க்கும்.

"வேதாகமம் (பைபிள்) அதை ஆக்கியோனின் கரங்களிலிருந்து வந்த பொழுது இருந்தது போலவே இன்றும் புதுமை மங்காமல் நமது வெளிச்சமும் ஜீவனுமாயிருக்கிறது. நாம் நமது ஜீவனை விலை மதிப்பது போலவே, வேதவாக்கியங்களின் அதிகாரம் அல்லது முக்கியத்துவத்தை விட்டு நம்மை திசைதிருப்பக்கூடிய எல்லாக் கோட்பாடுகளுக்கும் எதிராக, சற்றும் அசையாதவர்களாக நம் தீர்மானத்தில் உறுதியாய் நிற்போமாக."

# Reading and Reflection

**QUOTE 4: GOD'S PROMISE TO ISAAC - ABRAHAM'S SON**

Genesis 28:13-15

Gen. 28:13 அதற்கு மேலாகக் கர்த்தர் நின்று நான் உன் தகப்பனாகிய ஆபரகாமின் தேவனும் ஈசாக்கின் தேவனுமாகிய கர்த்தர், நீ படுத்திருக்கிற பூமியை உனக்கும் உன் சந்ததிக்கும் தருவேன்.

Gen. 28:14 உன் சந்ததி பூமியின் தூளைப்போலிருக்கும். நீ மேற்கேயும், கிழேக்கேயும், வடக்கேயும், தெற்கேயும் பரம்புவாய், உனக்குள்ளும் உன் சந்ததிக்குள்ளும் பூமியின் வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும்.

Gen. 28:15 நான் உன்னோடே இருந்து, நீ போகிற இடத்திலெல்லாம் உன்னைக் காத்து, இந்தத் தேசத்துக்கு உன்னைத் திரும்பி வரப்பண்ணுவேன். நான் உனக்குச் சொன்னதைச் செய்யுமளவும் உன்னைக் கைவிடுவதில்லை.

**QUOTE 5: GOD'S PROMISE TO JACOB -**

**ABRAHAM'S GRANDSON**

Genesis 28:13-15

Gen. 28:13 அதற்கு மேலாகக் கர்த்தர் நின்று நான் உன் தகப்பனாகிய ஆபரகாமின் தேவனும் ஈசாக்கின் தேவனுமாகிய கர்த்தர், நீ படுத்திருக்கிற பூமியை உனக்கும் உன் சந்ததிக்கும் தருவேன்.

Gen. 28:14 உன் சந்ததி பூமியின் தூளைப்போலிருக்கும். நீ மேற்கேயும், கிழேக்கேயும், வடக்கேயும், தெற்கேயும் பரம்புவாய், உனக்குள்ளும் உன் சந்ததிக்குள்ளும் பூமியின் வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும்.

Gen. 28:15 நான் உன்னோடே இருந்து, நீ போகிற இடத்திலெல்லாம் உன்னைக் காத்து, இந்தத் தேசத்துக்கு உன்னைத் திரும்பி வரப்பண்ணுவேன். நான் உனக்குச் சொன்னதைச் செய்யுமளவும் உன்னைக் கைவிடுவதில்லை.

**Genesis 25:7 tells that Abraham died at the age of 175 years. What evidence are we given in the quotes above that he didn't receive the promises before his death?**

The promises were re-stated to Isaac and Jacob after Abraham was dead. So they had not been fulfilled at that time, and hence not been fulfilled during Abraham's life either.



There is further proof of this in many Bible passages. For example we are told that Abraham owned absolutely no land in Canaan so he even had to buy a burial plot for his wife when she died. Also the fact that Abraham never obtained the promise is directly stated in Hebrews 11. Quote 9.